


இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சர்வதேச ஸ்குவாஷ் போட்டி 2023 நடத்துவதற்கு தமிழ்நாடு அரசு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை மற்றும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் நிதியுதவியாக முதற்கட்டமாக ரூ.1.50 கோடிக்கான காசோலையினை தமிழ்நாடு ஸ்குவாஷ் இராக்கெட் அசோசியேசன் சேர்மன் சாம்பியன் ஷிப் கமிட்டி என். இராமச்சந்திரன் அவர்களிடம் நேற்று (22.05.2023) வழங்கினார். இந்நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அரசு கூடுதல் தலைமை செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, மற்றும் பொது மேலாளர் (நிர்வாகம்) வே. மணிகண்டன், அரசு அலுவலர்கள் மற்றும் தமிழ்நாடு ஸ்குவாஷ் இராக்கெட் அசோசியேசன் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் 2023–24ஆம் நிதியாண்டின் அறிவிப்புகளை செயல்படுத்தும் வகையில் நேற்று (22.5.2023) செங்கல்பட்டு மாவட்டம், முடிச்சூர், சென்னை வெளிவட்டச் சாலையில் ரூ.29 கோடி மதிப்பீட்டில் தனியார் ஆம்னி பேருந்துகள் நிறுத்துவதற்கான இடத்தினை தேர்வு செய்வது தொடர்பாக குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் அவர்களும், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் மற்றும் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு அவர்களும் நேரில் சென்று கள ஆய்வு மேற்கொண்டார்கள். இந்த ஆய்வின்போது சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் உறுப்பினர் செயலர் அன்சூல் மிஸ்ரா, சட்டமன்ற உறுப்பினர்கள் (தாம்பரம்) எஸ்.ஆர்.ராஜா, (பல்லாவரம்) இ.கருணாநிதி, சி.எம்.டி.ஏ. தலைமைத் திட்ட அமைப்பாளர் எஸ்.ருத்ரமூர்த்தி , செங்கல்பட்டு மாவட்ட வருவாய் அலுவலர் இரா.மேனுவல்ராஜ், முதுநிலைத் திட்ட அமைப்பாளர் திருமதி.அனுசுயா மற்றும் துறை அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

### தமிழ்நாட்டில் கடந்த ஆண்டில் மட்டும்

# தி.மு.கழக ஆட்சியில் 14 லட்சத்துக்கும் மேற்பட்ட புதிய வேலை வாய்ப்புகள்!

## பணியாளர் வருங்கால வைப்பு நிதி அமைப்பு தகவல்!

சென்னை, மே 23 -

2022 - 23 நிதியாண்டில் தமிழ்நாட்டின் முறைசார் துறையில் 14 லட்சத்துக்கும் அதிகமான வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டதாக பணியாளர்கள் வருங்கால வைப்பு நிதி அமைப்பின் பதிவுத் தரவு காட்டுகிறது.

தமிழ்நாட்டில் அதிகபட்சமாக 18 - 21 வயதுக்குட்பட்டவர்களுக்கான 3,76,872 வேலைகள் உருவாக்கப்பட்டன. உற்பத்தி, மின்னணுவியல் மற்றும் ரியல் எஸ்டேட் போன்ற பிரிவுகள் தமிழ்நாட்டில் சிறப்பாக செயல்பட்டன

2022-23 நிதியாண்டில் (FY) தமிழ்நாட்டின் முறைசார் துறையில் 14,05,171 வேலைகள் உருவாக்கப்பட்டன, இது 2021-22 நிதியாண்டில் 12,84,986 வேலைகளாக இருந்து சுமார் 9.4% அதிகரித்துள்ளது.

பணியாளர் வருங்கால வைப்பு நிதி அமைப்பில் (EPFO) செய்யப்பட்ட புதிய நிகர பதிவுகளின் எண்ணிக்கையில் வேலை உருவாக்கம் அளவிடப்படுகிறது. 2022-23 நிதியாண்டுக்கான தற்காலிக ஊதியத் தரவை மே 20 அன்று EPFO வெளியிட்டது. தமிழ்நாட்டில், 18- 21 வயதுக் குட்பட்டவர்களில் அதிகபட்சமாக காணப்பட்டது, 2022-23 இல் 3,76,872 வேலைகள் உருவாக்கப்பட்டன. . 22-25 வயதிற்குட்பட்ட பிரிவில், 2022-23ல் 3,6,8981 பணிகளும், 35 வயதுக்கு மேற்பட்டவர்களில் 2,44,891 பணிகளும் சேர்க்கப்பட்டன.

29-35 வயதிற்குட்பட்ட பிரிவில், 2,35,006 வேலைகள் சேர்க்கப்பட்டன, அதைத் தொடர்ந்து 2628 வயது வரம்பில் 1,63,658 வேலைகள் சேர்க்கப்பட்டனர், தரவு காட்டுகிறது. 2022-23ல் 18 வயதுக்கு குறைவானவர்கள் 15,763 வேலைகளை கூடுதலாகக் பெற்றனர். தேசிய அளவில், 2022-23ல் EPFO ஆல் சுமார் 1.39 கோடி நிகர உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர், இது 2021-22ல் 1.22 கோடி நிகர உறுப்பினர்களில் இருந்து 13.22% அதிகரித்துள்ளது.

உற்பத்தி, மின்னணுவியல் மற்றும் ரியல் எஸ்டேட் போன்ற பிரிவுகள் மாநிலத்தில் சிறப்பாக செயல்பட்டன. இருப்பினும், உலகளாவிய காரணிகளால் ஜவுளி மற்றும் தோல் போன்ற முக்கிய வேலைவாய்ப்பை உருவாக்கும் துறைகளில் அழுத்தம் உள்ளது என்று பொன் ப்யூர் கெமிக்கல்ஸ் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநரும், MSME மற்றும் எளிதாக செய்வதற்கான இந்திய தொழில் கூட்டமைப்பு துணைக்குழுவின் தலைவருமான எம்.பொன்னுசாமி கூறினார்.

மார்ச் மாதத்தில், அதிகபட்ச நிகர உறுப்பினர் சேர்க்கைக்கான முதல் ஐந்து மாநிலங்கள் மகாராஷ்டிரா, தமிழ்நாடு, கர்நாடகா, ஹரியானா மற்றும் குஜராத் ஆகும். இந்த மாநிலங்கள் இணைந்து 58.68% உறுப்பினர்களை சேர்த்துள்ளதாக மத்திய தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது. மார்ச் மாதத்தில் அனைத்து மாநிலங்களிலும், மகாராஷ்டிரா 20.63% நிகர உறுப்பினர்களைச் சேர்த்து அட்டவணையில் முதலிடத்தில் உள்ளது, அதைத் தொடர்ந்து தமிழ்நாட்டில் பங்களிப்பு 10.83% என்றும் அது மேலும் கூறியது.

EPFO தரவு முறையான வேலைவாய்ப்பின் ஒரு சிறிய பகுதியை மட்டுமே உருவாக்குகிறது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும் என்று மெட்ராஸ் ஸ்கூல் ஆஃப் எகனாமிக்ஸ். இயக்குநர் கே. ஆர். சண்முகம் தெரிவித்தார். ஊழியர்களின் பதிவுகளை புதுப்பித்தல் ஒரு தொடர்ச்சியான செயல்முறையாக இருப்பதால், ஊதிய தரவு தற்காலிகமானது. அதனால் ஒவ்வொரு மாதமும் தரவு புதுப்பிக்கப்படும் என்று தொழிலாளர் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

2022-23 ஆம் ஆண்டில் அகில இந்திய அளவில் 13.2% ஆக இருந்த வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில், தமிழ்நாட்டில் நிகர வளர்ச்சி 9.4 சதவிகிதம் ஆக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

# பிரதமர் மோடி புதிய நாடாளுமன்ற கட்டிடத்தைத் திறப்பதா?

## மல்லிகார்ஜுன கார்கே உள்ளிட்ட கட்சித் தலைவர்கள் கண்டனம்!

புதுடெல்லி, மே 23 -

தற்போதைய நாடாளுமன்றக் கட்டிடம் 96 ஆண்டுகள் பழமை யானது. எனவே, அதற்கு பதிலாக புதிய நாடாளுமன்றம் கட்ட ஒன்றிய அரசு முடிவு செய்தது. கடந்த 2020ஆம் ஆண்டு டிசம்பர் 10ந் தேதி, புதிய நாடாளுமன்ற கட்டிடம் கட்ட பிரதமர் மோடி அடிக்கல் நாட்டினார். மத்திய பொதுப்பணித் துறை மேற்பார்வையில், டாடா புராஜக்ட்ஸ் நிறுவனம், கட்டுமானப் பணியை மேற்கொண்டது.

சுமார் 2 ஆண்டுகளில் புதிய நாடாளுமன்ற கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. பிரதமர் மோடி திறந்து வைக்கிறார். மக்களவையில் 888 உறுப்பினர்களும், மாநிலங்களவையில் 300 உறுப்பினர்களும் தாராளமாக அமரும் வகையில் பிரமாண்டமாக கட்டப்பட்டுள்ளது.

நாடாளுமன்றக் கூட்டு கூட்டம் நடக்கும்போது, மக்களவையில் 1,280 உறுப்பினர்கள்வரை அமரலாம். கட்டுமானப் பணி முடிந்த நிலையில், புதிய நாடாளுமன்ற கட்டிடம், வருகிற 28ந் தேதி திறக்கப்படுகிறது. அதை திறந்து வைக்குமாறு பிரதமர் மோடிக்கு மக்களவை சபாநாயகர் ஓம்பிர்லா அழைப்பு விடுத்தார். அதை ஏற்று, பிரதமர் மோடி திறந்து வைக்கிறார்.

திறப்பு விழா தேதியான மே 28ந் தேதி, சுதந்திர போராட்ட வீரர் சாவர்க்கரின் பிறந்தநாள் ஆகும். அந்த தேதியை தேர்ந்தெடுத்ததற்கும் எதிர்க்கட்சிகள் கண்டனம் தெரிவித்துள்ளன. "இது, தேசத்தின் முன்னோர்களுக்கு இழைக்கப்படும் அவமானம்" என்று காங்கிரஸ் கட்சி தலைவர் மல்லிகார்ஜுன கார்கே கூறியுள்ளார். புதிய நாடாளுமன்ற கட்டிடத்தை பிரதமர் திறப்பதற்கு இந்திய கம்யூனிஸ்டு கட்சி பொதுச்செயலாளர் டி.ராஜாவும் எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.

அவர் கூறியிருப்பதாவது:

நாட்டின் நிர்வாக பிரிவின் தலைவராக பிரதமர் இருக்கிறார். நாடாளுமன்றமோ, சட்டம் இயற்றும் பிரிவாக உள்ளது. எனவே, நாட்டின் தலைவர் என்ற முறையில், ஜனாதிபதி திரவுபதி முர்மு அதை திறந்து வைப்பதுதான் உகந்ததாக இருக்கும். மோடியை பொறுத்தவரை, சுய கவுரவம், கேமரா ஆகியவற்றின் மீதான ஆர்வத்தால், நாகரிகத்தையும், விதிமுறைகளையும் புறம் தள்ளுகிறார் என்று அவர் கூறியுள்ளார்.

ராஷ்டிரீய ஜனதாதள மூத்த தலைவர் மனோஜ்குமார் ஜா, "புதிய நாடாளுமன்ற கட்டிடத்தை ஜனாதிபதி திறக்கக் கூடாதா?" என்று கேட்டுள்ளார். அகில இந்திய மஜ்லிஸ் கட்சி தலைவர் அசாதுதின் ஒவைசி எம்.பி. தனது 'டுவிட்டர்' பக்கத்தில் கூறியிருப்பதாவது: புதிய கட்டிடத்தை பிரதமர் ஏன் திறக்க வேண்டும்? அவர் நிர்வாக அமைப்பின் தலைவர். சட்டம் இயற்றும் அமைப்பின் தலைவர் அல்ல. மக்களவை சபாநாயகரோ, மாநிலங்களவை தலைவரோ கூட திறந்து வைக்கலாம். அது மக்கள் பணத்தால் கட்டப்பட்டது. பிரதமர் ஏன் தன்னுடைய நண்பர்களின் சொந்த பணத்தால் கட்டப்பட்டதுபோல் நடந்து கொள்கிறார்? என்று அவர் கூறியுள்ளார். காங்கிரஸ் மூத்த தலைவர் ஆனந்த் சர்மாவும் எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.





